உ

குமரன் துணை.

விவேகபாநு.

வால்யூம் 5 } 1906ஸு மார்ச்சுமீ { புத்தகம் 3

கிராமங்களின் சீர்திருத்தம்.

நம் நாடு முற்காலத்தில் சிறப்புற்றோங்கி யிருந்ததற்குக் காரணம் நம் கிராமங்களின் செழிப்பும் ஒற்றுமையுமே. கிராமங்களின் ஒற்றுமையைப்பற்றி அந்நிய நாட்டார் மூக்கில் விரல் வைப்பது வழக்கம். கிராம க்ஷேமத்துக்காகப் பாடுபட்டு எல்லோரும் ஒருங்கு கூடி உழைத்து வந்தார்கள். வாய்க்கால் வெட்டு என்றாலும்சரி தண்ணீர்ப்பாய்ச்சல் என்றாலும்சரி எதுவிஷயத்திலும் ஊரார் ஒத்துழைத்துக் காரியங்களைச் சீராகவும் சிறப்பாகவும் நடத்துவது வழக்கம். ஒரு கிராமத்துக்குள் ஒருவன் நுழைந்தால் தன் காரியத்தைச் சுலபமாய் முடித்துப்போவான். கிராமத்தார்கள் எவ்வளவு படியாதவர்களாயிருந்தாலும் பொது தர்மங்களை அனுஷ்டித்துக் காரியங்களை ஒழுங்காகவும் நன்றாகவும் செய்து முடிப்பார்கள். ஊருக்குச்சில பெரியோர்களிருப்பார்கள். அவர்கள் லோகவிஷயங்கள் நன்கறிந்தவர்களாயிருப்பார்கள். எந்த விஷயத்தையும் கிராமத்தார்கள் அவர்களைக் கேளாமல் ஒரு காரியமும் செய்யார். ஊரில் சுபாசுபம் நேரும்பொழுதெல்லாம் கிராமத்தார் ஒத்துழைத்தே வேலை செய்வார்கள். அதனால் காரியங்கள் வெகுசுலபமாக நடந்து வந்தன. ஆகையால் அவ்வித ஒற்றுமையைக் கொண்டே சௌக்கியமாய் வாழ்ந்து வந்தார்கள். தற்காலம் கிராமங்களின் நிலைமை பரிதபிக்கத் தக்கதாயிருக்கின்றது.

கிராமத்தாரிடம் ஒற்றுமை ஒழிந்துபோய் வருகின்றது. நாளுக்குநாள் கிராமங்கள் க்ஷீணதசையடைந்து வருகின்றன. கிராமத்தார் பட்டணங்களுக்குப் போய்விடுகிறார்கள். வீடுகளெல்லாம் குடியிருக்க மனிதனின்றிப் பாழாய்க் கிடக்கின்றன. இருக்கப்பட்ட சில

ரும் ஒற்றுமையின்றிக் கக்ஷிப் பிரதிகக்ஷி பண்ணிக்கொண்டு கிராம க்ஷேமத்தைக் கெடுத்துத் தங்கள் சுயநன்மைகளையே தேடுகின்றனர். கிராமங்களில் முற்காலங்களில் போனால் பந்துப் பிரியமும் சிநேகவாஞ்சையும் அன்பும் நன்கு விளங்கிக் கொண்டிருக்கும். தற்காலம் அவை அநேகமாய் ஒழிந்து போயிற்றென்றே சொல்லலாம். கிராமத்தார் முற்காலத்தில் செட்டுங்கட்டுமாக வாழ்ந்து சுசியுள்ளவர்களாயும் தெய்வ பக்தியுள்ளவர்களாயும் தானதருமத்தில் பிரியமுடையவர்களாயும் பரோபகாரிகளாயும் இருப்பதுடன் அறிவையடைவதிலேயே ஆசையுடைவர்களாய் அதனை விருத்திபண்ணிக் கொண்டும் வாயையும் கையையும் கட்டிக்கொண்டு செட்டுங்கட்டுமாகவும் வாழ்வார்கள். எத்துணை இலாபமாயிருந்தாலும் மானமழிந்து மதிகெட்டுப் பணப்பேய் பிடித்து வாழமாட்டார்கள்? கிராமத்தின் சுகவாழ்வெல்லாம் அடியோடே அற்றுப்போய்விட்டன.

பட்டணங்களிலுள்ள கேடுகளெல்லாம் கிராமங்களில் நுழைந்துவிட்டன. முற்காலத்தில் கிராமங்களிலேயே அறிவுடையோர் சஞ்சரிப்பது வழக்கம். ஞானிகளும் கிராமவாசத்தையே பலமாய் விரும்புவார்கள். பட்டணங்களிலுள்ளவர்களிடம் அறியாமையும் அநாசாரமும் குடிகொண்டிருக்கும். தற்காலத்திலேயோ அவை தலைகீழாய் விட்டன. பட்டணங்கள் சிலாக்கியமென்று சொல்லும் வண்ணம் ஆய்விட்டன. கிராமவாசிகளுக்குக்கூட பெரியோர் சிறியோர் என்ற வித்தியாசம் தெரியாமல் போய்விட்டன. நெடுநாளாக நம் தேசத்தில் குடிகொண்டிருந்த நல்விஷயங்களெல்லாம் மாறி வருகின்றன. அந்நியநாட்டாருடைய சம்சர்க்கம் நமக்கு அதிகம் ஆய்க்கொண்டு வரவர நாம் நம் சுவதர்மங்களைக் கெடுத்து அந்நிய நாட்டார்களின் பழக்கவழக்கத்தை நல்லதோ கெட்டதோ என்றுகூட ஆராயாமல் அநுசரிக்கிறோம். ஒரு சிறு திருஷ்டாந்தத்தால் இதனை நன்கு விளக்கினாலன்றி இவ்விஷயம் நன்கு புலப்படாது.

சென்ற பத்து வருஷத்துக்கு முன்னரும் நம் கிராமவாசிகள் பானவிஷயத்தில் சரியாகவே இருந்து வந்தனர். தாங்கள் தாகத்துக்குப் பருகுவதெல்லாம் நீரும், மோரும், பாலுமே. தற்காலத்திலேயோ குழந்தைகள் முதல் காப்பி குடிக்காமலிருக்கிறதில்லை. இது

விஷயத்தில் நகரவாசிகள் கூட அத்தனை கெட்டுப்போகவில்லை யென்று சொல்லலாம். கிராமவாசிகளுக்குப் பால் சுலபமாய்க் கிடைக்கிறது. மாடு கறவை அதிகமாயிருப்பதால் பால் எக்காலத்தும் கிடைக்கும். ஆகையால் அதனையே நம் கிராமத்தார் அநேகர் காலையாகாரமாகவைத்துக்கொண்டு விட்டனர். சிறுவர் சிறுமிகள் பழைய சோறு சாப்பிடுகிற வழக்கத்தை அடியோடே தொலைத்து விட்டார்கள். சம்பந்தங்கள் வரவரப் பட்டணங்களில் அதிகமாக ஏற்பட்டு விட்டபடியால் பட்டணங்களிலுள்ள துர்வழக்கங்களே பிடிபட்டுக் கிராமத்தார் கெட்டுப்போகின்றனர். இம்மட்டோ?

குளு குளு வென்று நல்ல பாதிரிப்பூ விட்ட நீரையும் விலாமிச்சம் வேரிட்ட நீரையும் குடித்து நீர்வேட்கையைத் தணிப்பதற்குப் பிரதி எங்கும் சோடா நீரையே பருக ஆரம்பித்திருக்கிறார்கள், கிராமக் கடைகளில் எந்த பதார்த்தம் இருந்தாலும் இல்லாவிடினும் ஸோடா பாட்டில் மட்டும் ஏராளமாய்க் கிடைக்கும். அதனை அசுத்தமென் பதையும் சிறிதும் பாராட்டாமல் வருணாச்சிரம தர்மமும் குன்றி தண்ணீர் ஸ்தானத்திலேயே உபயோகிக்கத்தொடங்கியிருக்கின்றனர், அந்தோ! இதனை நினைக்குந்தோறும் பரிதாபமாக இருக்கிறதே. முதலில் காப்பிக்குடி தலையிட்டுப் பின் ஸோடா லெம்னேட்டில் வந்திருக்கிறது. முற்கூறியதில் அநாசாரம் ஒன்றுமில்லாமற் செய்து கொள்ளலாம். பின் கூறப்பட்டதிலேயோ முற்றிலும் அநாசாரத்துக்குட்பட்டே தீரவேண்டும். அஃதில்லாமல் அதை அநுசரித்தல் இயலாது. இனி இவ்விரண்டு வகைக் குடியும் பெருங்குடிக்குக் கொண்டுவிட்டு நம் குடியை அடியோடே ஏன் கெடுக்காது? இக்கேடோ காட்டுத் தீ போல் எங்கும் பரவிப் பற்றி யெரிகிறதே! இக்கொடிய சுவாலையை எவ்வாறு நாம் அவிக்கக்கூடும். இதற்கு ஊர் கூடியல்லவோ செக்குத் தள்ளவேண்டும். ரயிலில் பிரயாணம் செய்கிறவர்களில் ஸோடா குடியாதவர்கள் சிலரே யிருப்பார்கள். ஆங்கில பாஷை கற்றுக்கொண்டு பட்டணவாசஞ்செய்து வருகிற சிறுவர் விஷயம் மிகவும் மோசமானது. இதனால் நம் ஆசாரத்துக்குக்குறைவு நேரிட்டதுமன்றி நம்மில் வாழ்க்கைக்கும் கேடு வந்துவிட்டது. அதனால் வியாதியை நம் சிறுவர்கள் விலைக்கு வாங்குகிறார்கள். மருந்து

க்கு என்று ஏற்பட்ட ஸோடா இப்பொழுது பான அருகமாய் விட்டது. பெரியோர்களும் ஸோடா குடிக்கும் சிறுவர்களைக் கண்டிப்பதில்லை. அது தண்ணீர் மாதிரியாகவே ஒரு பதார்த்தம் என்று நினைத்திருக்கிறார்கள். இத்துர் வழக்கத்தால் ஏழைக் குடும்பங்களுக்கு எவ்வளவோ செலவு அதிகரித்துவிட்டது. 'பலதுளி பெருவெள்ளம்' என்றும் "ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை" என்றும் ஆகி நம் குடி யடியோடே கெட ஆரம்பித்துவிட்டது. கிராமவாசிகள் இத்துர் வழக்கத்தை யொழித்துப்பழைய முறையைக் கைக்கொண்டாலொழிய தேசத்துக்கு க்ஷேமமில்லை.

சுதேசியம் அதிகமாகப் பரவிவரும் இக்காலத்தில் இதனை முதலில் தொலைத்து நம் நீரையும் மோரையும் பாலையும் கைக்கொண்டு தேச க்ஷேமத்தைத் தேடுவோமாக. "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" இச்சிறு துவாரமே தேச க்ஷேமமாகிய பெரிய கப்பலைக் காலக்கிரமத்தில் கவிழ்க்க நேரிடலாம். "தீயன நல்லனவாகாவாம்." ஆகையால் இக்குடிகேட்டை நீக்க நம் கிராமத்தாரும் கிராமத்திலிருந்து பட்டணம் போயிருக்கிற நகரத்தாரும் முயற்சி செய்து தேச க்ஷேமத்தையும் குடும்ப க்ஷேமத்தையும் தேடுவாராக. இவ்வாறு செய்வதையே உண்மைச் சுதேசியம் என்போம்.

பத்திராதிபர்.

சிவமயம்.

* சிவாலய தரிசனவிதி மூல விரிவுரை.

காப்பு.

பூமுடிகொன்றைப்புனிதனுமுமையும்புரிதருதிருவருணோக்காற்
காமுடிக்கயிலையோவமண்டபத்தின்காமருசித்திரநின்று
மாமுடியடியொண்சித்திரமாகமருவுருக்கொண்டுசேர்த்தொண்டர்
தோமுடித்தேமமுறுத்துமுன்னோனைத்தொழுதுநம்பழுதுதீர்ந்திடுவோம்.

(இதன் பொருள்.) கொன்றைப் பூமாலையை யணிந்த பரிசுத்தராகிய சிவபெருமானும் உமாதேவியாருஞ் செய்தருளுகின்ற திருவருட் பார்வையால், சோலைகளைத் தன்மீதுடையனவாய்விளங்குகின்ற அருள் வடிவாகிய திருக்கைலாய மலையின்கண், சித்திரமண்டபத்திலே, அழகு பொருந்திய பிரணவ வடிவமான வோவியத்தினின்றும், பெருமை வாய்ந்த சிரசும் அடிகளும் விசித்திரங்களாகத் திருமேனி கொண்டெழுந்தருளி, சிறப்புப் பொருந்திய அடியார்களுடைய குற்றங்களை நீக்கி, அவர்களுக்கு இன்பங்களை அளித்தருளுகின்ற முதற்கடவுளாகிய விநாயக மூர்த்தியை வணங்கி, நாமும் நமது குற்றங்களினின்று நீங்குவாம். எ-று.

விசேடவுரை:— கொன்றையைக் கிளந்தெடுத்துரைத்தார் திருவடையாளமாலையாதலின்.

கண்டம்வரை யானை யுறுப்பும் அதன்கீழ் பூதவுறுப்புமாய்த் தோன்றல் பற்றி மாமுடியடியொண் சித்திரமாக மருவுருக்கொண்டு என்றார். தன்னை வணங்குந் தொண்டர் தோமுடித்து ஏமமுறுத்து முன்னோனெனவே தன்னை வணங்காதவர்களுக்குத் தோம் விளைவித்துத் துன்பமுறுத்துவரென்பதூஉம் பெறப்பட்டது. ஆசாரியர் மூலமாக உபதேசம் பெற்று அவருடைய சொரூபத்தை உணர்ந்து வணங்குகின்றவர்களுக்குப் பிரணவவடிவமாயும் மற்றவர்களுக்கு யானை வடிவமாயும் விளங்குவர் என்க.

---

* திருக்கைலாசபரம்பரைத் திருவாடுதுறை ஆதீனம் சுத்தாத்துவித சைவசித்தாந்த பாநுவாகிய இராமநாதபும் ஸ்ரீமத் இராமசாமிப்பிள்ளையவர்கள் திருவாய்மலர்ந்தருளியது.

முன்னொருகாலத்தில் பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் கின்னரர் கிம்புருடர் முதலிய யாவர்களும் ஓரிடத்திலே கூடித் தங்களுக்குள் சொல்லத்தொடங்கினார்கள். அதாவது, வஞ்சகர்கள் செய்கின்ற தொழில்கள் இடையூறின்றி அழகாக முற்றுப்பெறுகின்றன, அவர்களுக்கு இடையூற்றை உண்டாக்கவும், நமக்கு இடையூற்றை நீக்கி இனிதாக அநுக்கிரகஞ் செய்யவும், ஒரு கடவுளைப் பெறுதற்கு எம்பிரானுடைய திருவடித் தாமரைகளைத் துதித்து வேண்டிக்கொள்வாமென்று மனதில் நிச்சயித்தவர்களாய்த் திருக்கைலாய மலையையடைந்து செவ்வி நோக்கி செம்பொற்றிருக்கோயிலுட் சென்று வணங்கி முன்னின்று வேதங்களாற்றோத்திரங்கள் செய்து, மகாதேவரே அடியேங்கள் விண்ணப்பங்களைத்திருவுளஞ் செய்து கேட்டருளவேண்டுமென்று பிரார்த்திக்க, உடனே சிவபெருமான் சொல்லுங்களென்று திருவாய் மலர்ந்தருள, விண்ணப்பஞ்செய்யத் தொடங்கினார்கள். குற்றம் பொருந்திய மனத்தையுடைய கொடியவர்களாகிய அசுரர்கள் தொடங்குகின்ற செய்கைகள் முற்றுப்பெறா தனவாயழியவும், அடியேங்கள் முயலுகின்ற தொழில்கள் அழியாது இடையூறு தீர்ந்து முற்றுப்பெறவுங் கிருபை செய்தருளுவீராக வென்று பிரார்த்தித்தார்கள், அவ்விண்ணப்பங்களைத் திருச்செவி மடுத்து அருள் புரிந்து எல்லா வுலகங்களும் பிழைக்கும் பொருட்டு அப்படியே செய்வோமென்று அவர்களுக்கெல்லாம் விடையளித்தெழுந்து சென்று சித்திரசாலையைக் குறுகி அவ்விடத்து விளங்குகின்ற சித்திரங்களெல்லாவற்றையும் தனது தேவியாரோடும் பார்த்தருளி அங்கு எழுதிய பெரிய மந்திரங்கள் உப மந்திரங்கள் எல்லாவற்றையும் உமாதேவியாருக்குச் சிவபிரான் காட்டும்போது அவற்றுள் இரண்டுவகையாய் விளங்குகின்ற பிரணவ மந்திரங்களைப் பார்வதி தேவியார் கண்டு சந்தோடத்தோடு பலதரம் பார்த்து இம்மந்திரங்கள் யாவை, திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று சிவபிரானிடத்து விண்ணப்பஞ்செய்ய, உடனே சிவபிரான், தேவியைத் தழுவினவராய்த் திருவாய்மலர்ந்தருளுகின்றார்; ஹே தேவி! கேட்பாயாக, குற்றமில்லாத இந்தப்பிரணவம் நமது வடிவம், இது பிரமா விட்டுணு உருத்திரனென்னு முத்தேவரையுந் தந்ததாகும்; அங்கு தோன்றும் பிரணவம் உனதுவடிவம் வாணி, திரு

உமை, என்னுமுச்சத்திகளைப் பெற்றதாகும்; இவ்விரண்டு மந்திரங்களும் ஆண்யானை பெண்யானை வடிவங்களாகத் தோன்றுதலால் நாமும் இவைகளாகிப் புணர்வோமென்று அவ்வடிவங்களைக் கொண்டவர்களாய் விளையாடுங்காலத்தில் அவ்விரண்டு வடிவங்களினின்றும் உலகமெல்லாம் பிழைக்கும் பொருட்டு யானைமுகக்கடவுள் திருவவதாரஞ் செய்தருளினர். உடனே ஆசையோடு அக்குழந்தையை இருவரும் எடுத்தணைத்து மடித்தலத்திருத்தி ஆபரணங்கள் பலவற்றையுந்தரித்து மகிழ்கூர; உடனே அப்புதல்வனும் உவகையோடு எழுந்து அவர்களுக்கெதிர் நடனஞ்செய்தான், கண்கள் மிகக்களிப்படைய உலகங்களையெல்லா மீன்றருளிய பார்வதி தேவியார் அழகிய திருக்கரத்தை ஒத்திநின்று நடனஞ்செய்தலைப் பார்த்தருளிச் சிவபிரான் திருவடித்தாமரைகளை வணங்கி மகாதேவரே! நீர் பெற்ற இவனை இப்பொழுதே எங்குள்ள கணங்களும் கணநாதர்களும் துதிக்கும்படி உயர்ந்த தலைமைத் தன்மையைக் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்த மாத்திரத்தில் சூலபாணியானவர் பிரமா, விட்டுணு, கடவுளர், முனிவர், கணநாதர், யாவரும் உடனே வரும்படி திருவுளஞ் செய்தழைத்துத் தனது குழந்தையை மடிமீதிலிருத்தி அமரர்களைப் பார்த்துத் திருவாய்மலர்ந்தருளுகின்றார். இவன் பார்வதிதேவியாருக்கு மிகவும் இனியவன், நாம்பெற்ற மூத்தகுமாரன். நீங்கள் ஓர்ந்து கொள்ளுங்கள். இவனை இவ்வுலகமுழுதுந் தொழுது துதிக்குந் தலைமைத் தன்மையினிருத்துகின்றோம், இவனுக்கு முடி சூட்டும்பொருட்டு வேண்டுமுபகரணங்களை நீங்கள் கொண்டுவாருங்களென்று திருவாய் மலர்ந்து, அவர்கள் அப்படியே கொண்டு வந்து கொடுத்தபின்பு புத்திரனைச் சிங்காசனத்திலேற்றித் திருவபிடேகஞ்செய்து திருமுடி தரித்து அரசாட்சி செய்தற்குரிய ஆபரணங்களெல்லாவற்றாலும் அலங்காரஞ் செய்து அன்போடு பிரமனை மாயனைத்தேவர்களை முனிவர்களைப் பார்த்தருளி, இவன் உங்களுக்கெல்லாந் தலைவன் இடையூற்றினுக்கு நாயகனாக நாம் செய்தோம், நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்; கொடியவர்களாகிய அசுரர்களுக்கு மிகவும் இடையூற்றைச் செய்வான் என்று திருவாய்மலர்ந்தருளுகின்ற சிவபெருமானுடைய திருவாய்மொழியைச் சிரசிலே கொண்டவர்களாய் வணங்கித்துதித்து விட்டுணு முதலிய தேவர்கள் விக்கினேசுவரரைவணங்கித்தங்கள் தங்

களுக்குரிய கையுறைகளைப் பொருந்துமாறு உதவினவர்களாய் வணங்கி உத்தரவு பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் உலகங்களை அடைந்தார்கள். இது விநாயகர் திருவவதார வரலாறு என்க. இன்னும் இதின் விரிவை விநாயகபுராணம் காஞ்சிப்புராண முதலியவற்றிற் காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும். அநாதியே விநாயகரும், சுப்பிரமணியக்கடவுளும், மகேசுவரமூர்த்தியின் கண்டத்தின் வசிக்கின்றார்களென்றும் ஒவ்வொரு காரண நிமித்தம் ஒவ்வொரு காலத்தில் அவர்கள் அம்மிச பூதர்களாக ஸ்ரீகண்டபரமேசுவரனிடத்திலிருந்தும் தோன்றுகிறார்களென்றும் வாதுளாகமத்திற் கூறியவாற்றான் இதனுண்மையுணர்ந்துகொள்க.

விநாயகர் தியானப்பாடல் காஞ்சிப்புராணம்.

பண்ணியமும் வெண்கோடும் பாசாங்குசப் படையு
நண்ணிய செங்கைத்தலத்து நாதவொரு கோட்டுத்
தண்ணிய வெண்பிறைத்தாழ் சடையாய் மெய்யடியா
ரெண்ணிய வெண்ணியாங் கீந்தருளும் வள்ளலாலே.

திருச்சிற்றம்பலம்.

காப்பு முற்றியது.

இங்ஙனம்,

சுப்பிரமணிய பிள்ளை,

மதுரை திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனம்.

உ

கொழூத் துன்னூசியின்

பழையவுரை மறுப்பு.

பங்குனிமாதத்துச் செந்தமிழில் கொழுவுந் துன்னூசியும்பழையவுரையென்று ஸ்ரீமத். திரு. நாராயணையங்காரவர்கள் சில வெழுதினூர்கள். அவை பொருந்தாமை காட்டுதும்.

கொழுத்துன்னூசி யென்பவற்றிற்குப் பண்டுதொட்டுப் பயின்று வாராநின்ற புலப்பட்ட பொருளைத் தள்ளுதலும் புலப்படாப் பொருளைக் கொள்ளுதலும் உரை செய்யும் முறையாகுமா என்றும், பண்டைப் பொருள் பொருந்தாததாயின் அதனை யநுவதித்துத் தக்க காரணங்காட்டி மறுத்தலே முறையென்றும், பயின்றுவரும் பொருளறியாதா ருணரும்பொருட்டு அப்பொருளெழுதுகின்றேனென்றும் எழுதினூர்கள்.

சென்ற டிசம்பர் மீ விவேகபாநுவில் இவர்கள் கூறிய பொருளை யநுவதித்து மறுத்திருப்பதுடன் பின்னர்ச் சோழவந்தானூர் ஸ்ரீமத். அரசஞ்சண்முகனூரும் தமிழகத்தில் இப்பொருள் பொருந்தாமை முன்னரே பாநுவில் வெளிப்பட்டதென்று எழுதியிருக்கின்றூர்கள். அதன் பின்னர்ப் பங்குனி மாதச் செந்தமிழில் ஸ்ரீமத். மு. சாம்பசிவநாயனூரவர்களும் அவ்வாறே யெழுதினூர்கள். இங்ஙனம் பலரால் வெளிவந்த பொருளைக்காட்டிப் பயின்று வரும் பொருளை யேனேரறியவில்லை யெனலும் தக்ககாரணமன்றெனலுஞ் சாலுமோ. தமக்குத்தக்க காரணமன்றெனத் தோன்றின் அக்காரணத்தை யெடுத்துக்காட்டி மறுத்துப் பிறர் கொண்ட பொருளையு மறுத்தாலன்றே ஐயங்காரவர்கள் கூறிய பொருள் நிலைப்படும். இதுவன்றி எனையோர் கூறிய பொருள் புலப்படாப் பொருளெனல் எவ்வாறு கூடும்? ஐயங்காரவர்கள் கூறியபடி நச்சினூர்க்கினியர் முதலாய உரையாசிரியருள் ஒருவருமெழுதாமையின் அதனைப் பழையவுரை யெனலும் பொருந்தாது. பொருந்தா விடத்துப் பழையவுரையாயினும் பல மறுத்துச்சொல்லுஞ் சண்முகவிருத்தியில் இப்புதியவுரையைநியாயமின்றிக் கொள்ளல் வேண்டுமென்பதுங் கடனன்று.

இனிக் கொழுவென்பது பல பொருளை யுணர்த்துமாயினும் இயற்சொல்லாய் நின்று ஏனைய பொருளை யுணர்த்து மென்பதும் திரிசொல்லாற்றலினும் இயற்சொல்லாற்றலே வலியுடைத்தாதலின் உழு கொழுவே பொருளாமென்பதும் ஐயங்காரவர்கள் கொள்கை. ஏனைய பொருளுணர்த்தலும் இயற்சொல்லாற்றலே யென்பதும் அப்பல் பொருளுள் ஒன்றனைச்சுட்டல் வினைசார்பு இனம் இடமென இவற்றுளொன்றுபற்றி யென்பதும் நூற் கொள்கை. மாலை யென்னுஞ்சொல் மாலை வந்தானென்புழி மாலைக்காலத்தையும் மாலைபுனைந்தானென்புழிப் பூமாலையையும் ஒப்பவுணர்த்த அவற்றுள் ஒன்றனையே இயற்சொல்லாகி யுணர்த்துமெனிற் சாலாமைபோலவே கொழுவென்பதும் உழு கொழுவையே யுணர்த்து மென்பதுஞ் சாலாது. செம்மார் கொழுவையும் இயற்சொல்லாகியே யுணர்த்தற்குத் தடையுமில்லை. இவ்வாற்றான் செம்மார் கொழு மறுக்கப்படலும் உழு கொழுக் கொள்ளப்படலுமில்லை.

இனித் துன்னல் என்னுஞ் சொற்குப் பல வேறு பொருளுளவாயினும் இங்கு உழுதலே பொருளாகக் கொள்ளப்படுமென்றார்கள். துன்னல் உழுதலெனப் பிங்கலந்தை முதலியவற்றினும் பிற செய்யுளினுங் கண்டதில்லை. துன்னல் தைத்தலென யாண்டுங்காணப்படுகின்றது. இங்ஙனமாகத் துன்னலுக்கு உழுதலெனப் பொருள் கோடலேற்குமோ. உலகவழக்குண்மையிற் கொள்ளப்படுமெனிற் செந்தமிழ்நாட்டார் யாரும் வழங்கிலரென்பது தேற்றமாதலின் அதுவுஞ் செல்லாது. செந்தமிழ் மொழியே யெனின் துன்னல் தைத்தலென்னும் பொருளில் துன்னர் துன்னகாரரென்பனதையற் காரரையுஞ் செம்மாரையு முணர்த்தினாற் போலவும் நெருங்கற் பொருளில் துன்னியார் நட்டாரையும் துன்னார் துன்னலரென்பன பகைவரையு முணர்த்தினாற் போலவும் அத்துன்னலுக்குத் தமிழ் வழக்கில் உழுதலும் பொருளாகுமேல் அத்துன்னர் முதலாயவற்றுளொன்றாயினும் உழுநரையு முணர்த்தல் வேண்டும். அங்ஙனமின்மையால் தமிழன்றென்பது தேற்றமே. தமிழர் வழங்காவிடினுந்தெலுங்கர் வழங்குகின்றனர். அத்தெலுங்கர் சொல்லையே பழக்கமிகுதியாற் சில தமிழருங் கூறுகின்றனர். அங்ஙனம் வழங்கினும் தமிழ் வழக்குள் யாண்டுங் காணப்பெறாமையாலும் தைத்தலெனவே வழங்கப்பட

லானும் தமிழில் வழங்கிய பொருளை விடுத்து அதனுள் வழங்கப் பெறாது தெலுங்கராலும் பிரசித்தமின்றிச் சிறுபான்மை வழங்கப் பெறும் பொருளைக் கொண்டு பண்டைக்காலத்தே யெழுதிய வாசகத்தை வலியுறுத்தல் எவ்வாற்றானும் பொருந்தாது.

தமிழ்ச் சொல்லுள்ளும் திரிசொல்லாற்றலினும் இயற்சொல்லாற்றலே வலியுடைத் தென்ற ஐயங்காரவர்களே துன்னல் தைத்தலென்று உலகவழக்கினுஞ் செய்யுள் வழக்கினும் பரந்து காணப்படுந் தமிழ் வழக்கை விடுத்து தெலுங்கு வழக்குக் கொண்டு கலப்பையினுறுப்பெனச் செந்தமிழ் மொழிக்கு உரை கூறியது வியப்பினும் வியப்பே.

தெலுங்கரும் உழவினைத் துன்னு என்னின்றாரன்றிக் கலப்பையுறுப்பைத் துன்னூசி யென்பதில்லை. யாண்டோ ஒரு மூலைமுடுக்கில் வழங்கப்படுகின்றதெனினும் இக்காலவழக்கெனப் படுமன்றி முற்கால வழக்கெனற்கு யாதோராதரவு மில்லை. இங்ஙனம் பிற்கால வழக்கைக் கொண்டு முற்காலத்து வாசகத்துப் பொருள் கோடல் காலமயக்க மென்னும் வழுவாம். முற்காலத்தில் இவ்வழக்கில்லை யெனற்கு ஏரெழுபதில் உழுகருவி யெல்லாஞ் சொல்லப்படலும் துன்னூசி சொல்லப் படாமையுமே தக்க சான்றாம். ஏரெழுபதின் காலத்தே துன்னூசி கலப்பை யுறுப்பென வழங்கப் பெறாமை பெறப்படலின், அதன் முற்காலத்தே யெழுதிய கொழுச் சென்ற வழித் துன்னூசி செல்லுமென்ற வாக்கியத்துக்கு அப்பொருள் கூறல் எவ்வாறு பொருந்தும்.

கொழுச் சென்றவழிக் கலப்பையுறுப்புச் சென்றாற் போலவெனிற் பொருள் செவ்வனே விளங்கவும் அதனை விடுத்துத் துன்னென்று பிற்பட்ட இக்காலத்துத் தெலுங்கர் வழங்கும் வழக்கினை நினைந்து அச்சொல்லோடு ஊசியென்னுந் தமிழ்ச்சொற்புணர்த்து அவ்வூசிக்கும் செம்பொருள் கொள்ளாது ஊசிபோன்ற கலப்பை முனையெனக்குறிப்புப் பொருள்கொண்டு துன்னூசி சென்றாற்போலவெனமுன்னோர் கூறற்கு என்ன காரணம் நேர்ந்தது. துன்னூசிக்குச் செம்பொருளாகிய தையலூசியைக் கருதாது கலப்பையுறுப்பெனவாளா கூறுவாரேல் மயங்க வைத்தலென்னுங் குற்றமாகுமன்றோ.

இனிக் கௌணலக்ஷணையால் உழுதல் தைத்தலை யுணர்த்துந் துன்னென்னும் பெயரால் வழங்கப்பட்ட தெனினும் ஆம் என்றார்கள். செம்பொருளுணர்த்துஞ் சொல்லை விடுத்துக் கௌணத்தாற் பிறிது பொருளுணர்த்துஞ் சொல்லையிழுத்து வைத்தற்கு அவ்வாக்கியத்தில் என்ன தடை நேர்ந்தது. வேறு தமிழ்ச்சொல் அகப்படவில்லையோ. செய்யுளாயினும் யாதானுமொருகாரணங் கூறிவிடலாம் வசனத்திற்குக் காட்டல் முடியாதே. காரணங்காட்டிக் கூறினாலன்றி அதுவுங் கொள்ளற்பாற்றன்று.

இனிக்குத்தித் தைத்ததோற் செருப்பைக் கொண்டு காட்டல் ஈனோபமையாகாதா வென்றார்கள். கொழுவென்பது செம்மாரது கொழுவென்பதும் அது தோற்கருவி செய்யுங்கருவி யென்பதுஞ் சண்முக விருத்தியின் கருத்து. அங்ஙனமாக அக்கொழுவை யீனோபமையெனல் எவ்வாறு பொருந்தும். செருப்பையுவமித்தார் ஒருவருமில்லையே. பாநுவில் அக்கொழுவின் செயலை விளக்கற் பொருட்டுச் செருப்பு முதலாயின தைத்தற் குபயோகமாம் என்றெழுதினது கொண்டு அவ்வாறு சொன்னார்கள் போலும். உபமானத்திற்குக் கொண்ட பொருள் ஈனமுடையதா அல்லாததா என்று கருதலை நூன்முறை யாதலன்றி அது பயன்படு வகையுள் ஒன்று கொண்டு ஈனமெனல் சாலாது. இது முடை நாற்றமுடைமையாற் கடல் ஈனோபமை யென்பதனோ டொக்கும். பொருத்த முடைத்தாயின் எதுவும் உவமைபாதற்குத்தட்டில்லை. இதனை "நாயனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்" என்னும் நாலடியாலுந் தெளிக. இங்ஙனம் நாயும் உவமைக்குக் கொள்ளப்பட்டிருப்பப் பேரிகை குதிரைக் கல்லணை அங்கவடி வாத்தியங்கள் முதலாய பலவுயர்ந்த பொருள் செய்தற்குக் கருவியாயுள்ள செம்மாரது கொழுவைத் தைத்தற்கு உபயோகப் படுகின்றதேயென அதனதுஏகதேசவுபயோகத்தை மாத்திரங் கருதி ஈனோபமையெனல் சிறிதும் ஏலாமை கண்டுகொள்க.

இனி நிகண்டு முதலாயவற்றில் வழங்கப்படாமையால் துன்னூசியைக் கலப்பையுறுப்பெனல் கூடாதெனின் அவ்வாறே அவற்றில் துன்னூசியென வழங்கப்படாத ஊசிக்காதினையேனும் ஊசியையேனும் எவ்வாறு கொள்ளுதல் கூடும் என்றார்கள்.

ஈதென்ன புதுமை ! துன்னல் தைத்தலென நிகண்டு முதலாய வற்றில் மிக வழங்குகின்றனவே. ஊசியென்பதும் அத்தன்மைத்தே. இவ்வாருக வழங்கப்படாத துன்னூசி யென்று எவ்வாற்ருற் கூறினுரோ அறியேம். "ஊசியொடு குயின்ற தூசும்பட்டுமென அவர்களே ஊசி வழங்கலை யெடுத்துக் காட்டிவிட்டார்கள்." துன்னல் தைத்தலென்பதும் துன்னர் தையற்காரர் செம்மாரென இவரை யுணர்த்துமென்பதும் நிகண்டு முதலியவற்றிற் கண்டு கொள்க. ஆதலின் அவை இருவகை வழக்கினும் வழங்கப் பட்டனவேயன்றி வழங்கப்படாதனவல்ல. அற்றன்று; துன்னும் ஊசியும் தனித்தனி வழங்கினவன்றித் துன்னூசியெனச் சேர்ந்து நிகண்டில் வழங்கவில்லையெனிற் குடக்கட்சேதாகூர்வாயகாக்கை செங்காலன்னம் என அடையொடு கூறின் அவ்வடையும் அச்சொல்லும் வழக்குடையனவா அல்லவா வென்று கருதலே முறையன்றி அவ்விரண்டுஞ் சேர்ந்து நிகண்டில் வழங்கப் பட்டனவாவென வாராய்தல் வேண்டப்படாத வெற்றுரையாம். ஆதலால் தனித்தனி வழங்கலுண்மையில் ஊசியை அடைபுணர்த்துத் துன்னூசியென வழங்கல் சாலுமென வறிக.

ஊசி யென்பது அடையடாது தனியே நின்று அப்பொருளுணர்த்து மாற்றலுடைய தாயிருப்பத் துன்னூசியென வாளா அடைகொடுத்துக் கூறுவதெதற்கு என்ருர்கள். கூறுதும்.

ஊசியெனத் தனித்து நிற்பின் அவ்வூசி எழுத்தாணி முதலிய பல் பொருளுணர்த்துமாதலின் அவற்றுள் தையாத பிறவூசியைவிலக்கித் தையலூசியையுணர்த்தற் பொருட்டுத் துன்னென்னும் அடைபுணர்த்தே கூறல் வேண்டும். இது மரபு. ஐயங்காரவர்களும் முள்ளினூசி பொன்னினூசி குத்தூசி குண்டூசி யென அடையொடு புணர்ந்தன பலகாட்டினுர்கள் அவையெல்லாம் அவ்வடையில்வழிக்குறித்த பொருளுணர்த்தாவன்றே. அதுபோலவே யீண்டுப். துன்னூசியென அடைபெருவிடின், குறித்த தையலூசிப் பொருள்படாமை கண்டு கொள்க. அவ்வடை பெற்ற ஊசிக்குத்தைத்தலைச் செய்யும் ஊசியென்பது பொருளாதலிற் செம்மாரதுகொழுச் சென்றவழியிற் சென்று தைத்தலைச் செய்யாத பிறவூசிகளை விலக்கிக்கொழுச்சென்ற வழியிற் சென்று தோலைத் தைக்குஞ் செம்மாரது ஊசியை யுணர்த்துமாறறிக. ஊசியொடு குயின்ற தூசு என்புழிக் குயின்ற என்பது

தைத்தலை யுணர்த்தலின் அவ்வினையால் ஆங்கு அடையின்றியும் பொருளுணர்த்திற்று. அங்ஙனமின்மையின் ஈங்கு அடைவேண்டப் படலுங் காண்க.

துன்னூசி யென்றது ஊசி சென்றாற்போல வெனிற் கொழு வென்பது செம்மார் கொழுவென்பதும் ஊசி யென்பது அச்செம்மா ரது தோல் தைக்கு மூசியென்பதும் பெறப்படாமையுங்காண்க. இது வரை துன்னூசி கலப்பையுறுப்பன்றெனலும் செம்மாரது தையலூசி யே யெனலும் விளக்கப்பட்டன.

இனிக்கொழுவுங் கலப்பை யுறுப்புங் கொள்ளினும் உவமை பொருந்தாமை காட்டுதும். கொழுச் சென்றவழியென்பது கொழுச் சென்றபின் எனப்பொருள் படுமாதலின் கொழுச் சென்றபின் செல்வதாய ஒன்றே உவமமாதல் வேண்டும். கொழுவும் கலப்பை யு மியைந்து ஒருங்கு செல்லுமே யன்றி கொழுத் தனியே சேறலும் பின்னர்க் கலப்பை சேறலும் யாண்டு மில்லை. பாயிரத்துடன் கேளாமல் அதனைத்தனியாகக் கேட்டபினனரே நூல் கேட்கின்ற உபமேயவினையையு முய்த்துணர்க. இதுவன்றிப் பாயிர மு நூலுங் கேட்பின் அறிதற் பயனுக்குப் பிறிதொன்று வேண்டலி ல்லை, கொழுவோடியைந்த கலப்பையாலுழினும் அம்மட்டிற் பயனி ன்றிப் பயன் முற்றுற வேண்டில் பரம்படித்தல் வரம்புதிருத்தல் எருவிடல் நீர்ப்பாய்ச்சல் களைகட்டல் காத்தலெனப் பிற பலவும் வேண்டும். இதுவுங்கருதற்பாற்று. இன்னும் பாயிரங்கேளாதே நூல் கேட்டல் மரபென்று இதனையே உவமத்தால் விளக்கப்புக் காராகலானும் கலப்பைமுனை விரைந்து தேயாமைப் பொருட்டுக் கொழுக்கட்டலேயன்றிக் கொழுவின்றியும் கலப்பையே இனிதுசெ ன்றுழுதல் கூடுமாதலானும் உவமை பொருந்தாமை கண்டு கொள்க.

மதுக்கூர்வாய்ச்சோழகர், யாழ்ப்பாணத்துப் பிள்ளையவர்கள்சந் தேகிஎன்பவர்களும் இவ்விஷயத்தைப் பற்றிப் பலவரைந்தார்கள். அவையெல்லாம் அவ்வக்காலத்தே முறையாக மறுக்கப்பட்டன. இங்ஙனம் மறுக்க வந்தவர்களில் ஐயங்கார் அவர்களே இறுதியான வர்கள். இவர்கள் கோளும் இதனானே இறுக்கப்பட்டது. இச் சிறிய விஷயத்தில் இத்தனை விவகார நீட்சியுறல் வருந்தத்தக்கதே. ஆதலின் ஒவ்வொருவரும் மேற்கூறிய கடாவிடைகளைக்கண்டு தத் தமக்கேற்றவாறு கொண்டு அமைவதே நன்றாம். மேலுமேலும் இதனையே வாதித்துக் காலங்கழிப்பதானது செய்ததையே செய்வ தான வீண்செய்கையே. பிஷ்ட பேஷண நியாயமிதுவன்றோ? ஆதலின் இம்மட்டில் நிறுத்துகின்றோம்.

சனகைவாசி ஆர். சிவக்கொழுந்து முதலியார்.

இலுப்பைப் பூவி னுபயோகம்.

நம்மிராஜதானியின் தென்பாகங்களில் விசேஷமாக இலுப்பை மரங்களுண்டு. அதன் காய்கனிகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயானது பசுவின்நெய்க்கு சமானமாகபாவிக்கப்பட்டு சைவ வைஷ்ணவாதி ஆலயங்களுக்கு விசேஷமாக தீபத்துக்குபயோகிக்கப்பட்டு வருகிறது. இலுப்பெண்ணெயானது ஒருவித உயர்ந்த சோப் செய்வதற்கு முபயோகிக்கப்படுகிறது. தவிர இலுப்பை மரங்கள் மற்ற மரங்களைக் காட்டிலும் விசேஷமாகப் பூத்து சில பிஞ்சு பிடித்தும் சில பிடியாமலுமுதிரும். அப்படி யுதிரும் பூக்கள் சுமார் 5 கலமுதல் 50 கலம் வரையிலுமிருக்கும். இப்பூவானது பெரிய குடமல்லிகைப் புஷ்பத்தைப் போன்று இரட்டிப்புப் பருமனுள்ளதாய் மயக்கந்தரக்கூடிய ஒருவித வாசனையோடு அதிக தேனையும் ரசத்தையுமுடையதாயிருக்கும். இப்பூக்களிப்போது பிரயோசனப்படாமல் வீணாகிறது. இதை எவ்விதமாய் பிரயோசனப்படுத்தலாமென்பதைப்பற்றி இங்கு ஆலோசிக்கப்படுகிறது. அதாவது ஆலையில்லா வூருக்கு "இலுப்பைப்பூ சர்க்கரை" என்று ஒரு பழமொழி ஏற்பட்டிருக்கிறது. அதன் கருத்தென்னவென்றால், இலுப்பைப்பூவை சேகரித்து அதன் ரசத்தை எடுத்துக் காய்ச்சினால் கெட்டிப்பட்டு சர்க்கரையாகிவிடும்; அதை யுபயோகித்துக் கொள்ளலாமென்பதே. இப்படி சர்க்கரையாவதை சுத்தப்படுத்தி சினி அதாவது வெள்ளைச் சர்க்கரையாகவும், அதைக் காய்ச்சிக்கற்கண்டாகவும் செய்து கொள்ளலாம். அக்கற்கண்டு இப்போது மருந்துகளுக் குபயோகப்படுத்தும் சினாக்கற்கண்டுக்கு சமானமானதென்று சிலர் நினைக்கிறார்கள். 2-வது இதிலிருந்து ஒருவகை சாராயம் காய்ச்சலாமென்றும், அவை மேல் நாட்டிலிருந்து வரும் பிராந்திகளுக்கு சமானமானதென்றும் முன்னொரு சமயம் கவர்ன்மெண்டாரே இலுப்பைப்பூ ரசத்தில் சிலவற்றை சேர்த்து சாராயம் வடித்துப் பார்த்தார்களென்றும், அது பெருங் குடிகாரர்களால் கூட மெச்சிக்கொள்ளப்பட்டதென்றும் சிலர் சொல்லுகிறார்கள். 3-வது இலுப்பைப்பூ ரசத்தில் எண்ணெய் சத்திருக்கிறதென்றும் அதில் சில கலப்புகள் சேர்த்தால் தேங்காய்

எண்ணெயைப் போன்று விளக்கெரிக்கவும் பலகாரம் பண்ணவு முப போகிக்கலா மென்றும், சொல்லுகிறார்கள். இந்த அம்சங்களை யெல்லாம் சோதித்துப் பார்த்து நிர்த்தாரணிக்க வேண்டும். அப்படி சோதித்துப் பார்ப்பதற்கும் அதிகமாக செலவழிந்துவிடமாட்டாது. அப்படியாக செய்யப்படும் சர்க்கரை, சாராயம், எண்ணெய் முதலியவைகள் அந்நியதேசத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு விலை சரசமாய் விற்கக்கூடியதென்றும், இம்மாதிரித்தொழில் தேசத்திலுள்ள ஏழைகளுக்குப் பிழைப்பை யுண்டாக்கக்கூடியது என்றும் எல்லோரு மறிவார்கள். இலுப்பைப்பூவில் கருப்புக்கட்டியைச் சேர்த்து ஒரு விதமாகப் பக்குவப்படுத்தி மேல் நாட்டார் அதை யொருபலகாரமாக உபயோகிக்கிறார்கள். இங்கும் அவை ஒரு சிறு ஜாடியிலடைக்கப்பட்டு வந்து ஷாப்பில் விற்கப்படுவதாகக் கேள்விப்படுகிறோம். நம் நாட்டில் சாப்பிட்டுவிட்டு வேலையின்றித் திரியும் சோம்பேறிகளும் தேசாபிமானிகளும் தேசாபிவிருத்திக்கு சாதகமான இவ்வித பரீக்ஷைகளிலும் ஆலோசனைகளிலும் காலத்தைச் செலுத்தி நாட்டுக்கு நன்மைசெய்ய முற்படுவது நல்லது அல்லவா? இப்படி யெத்தனையோ பொருள்கள் பிரயோசனமின்றி வீணுப்போகின்றனவே. அவைகளைக் கவனித்தால் தமக்கும் லாபம், பிறருக்கும் லாபம், பரத்துக்கும் புண்ணிய முண்டாகுமே. இம்மாதிரி ஒரு விஷயம் ஒரு ஆங்கிலேயனுடைய நோட்டீசுக்குப் போகுமேயானால் அதைப் பரீக்ஷித்து இதை வியாபாரப் பொருளாக்கி அதிலிருந்து லட்ச லட்சமாகவும் கோடி கோடியாகவும் பொருள் சம்பாதித்து விடுவான். இப்படியே மண் எண்ணெயும், சோப்பும் மெழுகுவர்த்தியும், பால்பெட்டியும், மெல்லின்ஸ் ஆகாரமும், பின்னும் அநேகவிதப் பொருள்களையும் கண்டுபிடித்து முன்னுக்கு வந்தார்கள். அதுபோல இந்தியர்களாகிய நாமும் எத்தொழிலைச் செய்யலாம், எதைப் புதிதாய்க் கண்டு பிடிக்கலாமென்ற நோக்கத்தை ஏழைகள் முதல் பிரபுக்கள் ஈறுகத் தேடவேண்டும். அப்போதுதான் தேசத்திலுள்ளதரித்திரம்நீங்கும்.

சு-மி-ன்.

திருமாலிருஞ்சோலை.

அல்லது

அழகர்கோவில்.

நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகிய இத்திவ்விய க்ஷேத்திரம் மதுரையின் வடக்கே 12 மைல் தூரத்திலுள்ளது. காலையில் ஒரு வண்டியேறிச்சென்றால் தரிசனம் செய்து மாலையில் திரும்பிவிடலாம். போகவர வண்டிவாடகை இரண்டு ரூபாமுதல் 3 வரை வண்டிக்குத்தக்கபடியிருக்கும். ஒவ்வொருபக்திமானும் தரிசிக்கவேண்டிய ஸ்தலமே? அழகர் மலை என்று சொல்லப்பட்ட ஒரு சிறிய மலையினடிவாரத்தில் அழகருக்குக் கோவில் கட்டப்பட்டிருக்கிறது. இக்கோவிலைச்சுற்றி பெரிதும் உன்னதமுமான மதில் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அம்மதிலைச்சுற்றி எங்கும் காடாகவேயிருக்கும்; மதிலுக்குள் ஒரு பெரிய பட்டணம் இருந்ததாகக் கூறுகிறார்கள், தற்காலம் ஆங்கு ஒரு வீடுமில்லை, மதிலின் சுற்றளவு ஏறக்குறைய மூன்று நான்கு மைல் இருக்கலாம். மதிலின் தென்புறத்தில் ஒரு பெரிய வாசல் இருக்கின்றது, அதன் வழியாகவே வண்டிகளும் ஜனங்களும் போதல் வேண்டும். உள்நுழைந்தவுடன் ஒரே வெளியாய்த் தோற்றுகின்றது. ஊடே சில பாழ் மண்டபங்களும் புராதனக்கட்டிடங்களும் காணப்படுகின்றன.

சிறிது தூரஞ்சென்றால் மற்றொரு பெருவாசல் காணப்படும். அதனுள் நுழைந்தே கோவிலுக்குட் செல்லல்வேண்டும். அதுவும் தென்புறமே உள்ளது. அதற்குள்ளும் வண்டிகள் தாராளமாய்ச்செல்லும்; உள் நுழைந்தவுடன் கோபுரங்களும் புஷ்கரணி என்ற தீர்த்தமுங் காணப்படுகின்றன. புஷ்கரணியில் சிலகாலமே தீர்த்தமிருக்குமெனத்தோற்றுகிறது. கிழக்குப்பார்த்த பெரிய கோபுரவாயிற் பெருங்கதவுகள் அடைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு பதினெட்டாம் படிக் கறுப்பன் கோவிலிருக்கின்றதாகக் கூறுகின்றார்கள். கதவுகளுக்கு முன்பக்கத்தில் பெரிய அரிவாள் முதலிய பிடாரி கோவில் ஆயுதங்கள் மூலையில் வைக்கப்பட் டிருக்கின்றன. விவகாரத்தில்

கச்சேரிவாசலுக்குச் செல்ல இஷ்டமில்லாத சுற்றுப்புற கிராமவாசிகள் அப்பதினெட்டாம்படி யேறி சத்தியம்செய்து சங்கதிகளைச்சொல்லும்பக்ஷத்தில் மற்றொரு க்க்ஷிக்காரர் அதனை வேதவாக்காக ஒப்புக்கொண்டுபோவது வழக்கம். இன்றும் அவ்வழக்கம் நடந்துவருவதாகக் கேள்வி. இதனால் சர்வவல்லமையுள்ள தெய்வத்தின் முன்பாகச் சொல்லுகிறது உண்மையே என மதித்துவரும் நம் ஜனங்களின் தெய்வபச்தியை என்னென்போம். இன்றும் கிராமங்களில் கண்ணை சொல்லென்றும், 'பிள்ளையைப்பிடித்துச் சொல்வாயா' என்றும், 'வேலைப்பிடுங்கிப்போட்டுத் தாண்டுவாயா' என்றும் ஜனங்கள் சொல்லிக்கொள்வதைக் கேட்கலாம். இவ்வாறு தெய்வத்தின் சர்வாந்திரியாமித்துவத்தையும் சர்வசக்தியையும் ஜனங்கள் மேலாக மதித்து அஞ்சி நடந்துவந்தார்கள். கோர்ட்டுகளும் கச்சேரிகளும் வக்கீல்களும் சட்டங்களும் அதிகரிக்க அதிகரிக்கத் தெய்வபயமும் குறைந்து அசத்தியமேலிட்டுத் தேசம் சீர்குலைந்துவருகிறது. கோர்ட்டு நடவடிக்கைகள் அதிகம் தெரியாத கிராமக்குடிகளிடத்தில் இத்தெய்வ பயம் இன்னும் இருந்துவருகிறது. லா ஏஜண்டு என்று சொல்லப்பட்ட சில சுயகாரியப்புலிகள் விடுமுறை நாட்களில் கிராமங்கள் தோறும் சென்று வழக்குகளை விலைக்கு வாங்கிக் கிராமவாசிகளின் சுகவாழ்வைக் குறைத்துவருகிறார்கள். கிராமத்தார் பஞ்சாயத்தார் முன்னிலையிலும் தெய்வ சன்னிதிகளிலும் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ளுதலே உசிதம். அவ்வாறு இல்லாமல் கச்சேரி வாசலுக்கு வந்தால் "கோர்ட்டுக்குப் போகிறவன் ஓடு எடுக்கவேண்டியதுதான்" என்றவண்ணம் அடியோடே கெட்டுப்போகவேண்டிவரும். அவ்வாறு கெட்டுப்போகாமல் அழகர்கோவில் கிராமவாசிகள் தெய்வ சன்னிதானத்தையே மேலான கோர்ட்டாக நினைத்து நடவடிக்கைகளை நடத்திவருவது மிகவும் புகழத்தக்கது. அக்கோபுரவாயிலுக்கு நேர் கிழக்கே புஷ்கரணிக்கரையின் மேல்கரையில் சில விருக்ஷங்கள் காணப்படுகின்றன. அவைகளில் வானுறவோங்கி வளம்பெற வளர்ந்திருக்கிற அர்ச்சுனவிருக்ஷங்கள் கண்டோர் கண்களையும் மனத்தையும் கவர்கின்றன. அம்மரத்தடியில் ஒரு பெருந்தண்ணீர்த்தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. அத்தொட்டிக்குள் மலையின் உன்னதபாகத்திலிருந்து குழாய் வழியாக ஜலம் கொண்டுவந்து விடப்பட்டிருக்கிறது. அது

மனுஷர்களுக்கு உபயோகப்படுவதினும் மாடுகளுக்கு மிக உபயோகப்படுகின்றது. வண்டிக்காரர் தங்கள் மாடுகளுக்கு அவ்விடத்தில் தண்ணீர்காட்டுவதுமன்றி அவைகளைக் குளிப்பாட்டவுஞ் செய்கிறார்கள். பதினெட்டாம்படி கோபுரத்துக்குச்சுமார் இருபது கஜத்துக்கு அப்பால் மற்றோர் வாசல் காணப்படும் அந்த வழியாகத்தான் கோவிலுக்குள் வண்டிகளும் ஜனங்களும் போகவேண்டுவது. அந்த வாயில் வழியாக நுழைந்தால் ஒரு பெருமுற்றவெளிகாணப்படும். அவ்வெளிக்குச் சுமார் 300 அல்லது 400 கஜங்களுக்குமேல்புறம் கோவிலிருக்கின்றது. அவ்வெளிக்கு வடபுறமும் தென்புறமும் அடுக்கறைகளும் மண்டபங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளில்தான் பிரயாணிகள் இறங்கி சமையல் சாப்பாடு செய்துகொள்ளுகிறது வழக்கம். வடபுற அறைகளில் ஒன்றில்தான் மலையினுச்சியிலிருந்து குழாய்வழியாகத் தண்ணீர்கொணர்ந்து ஒரு பெரிய தொட்டியில் விடப்பட்டிருக்கிறது. அதிலிருந்துதான் அம்முற்றத்தின் இருபுறங்களிலும் தண்ணீர்க்குழாய்கள் கொண்டுபோய் விடப்பட்டிருக்கின்றன. சுமார் எழெட்டுக் குழாய்களுக்குமே லிருக்கின்றன. அவைகளில்லாவிடில் ஜனங்களுக்கு அந்நிர்மானுஷ்யமான காட்டில் சிறிதும் ஜலசௌக்கியமிராது. இக்குழாய்கள் வெகு பணச்செலவில் எற்படுத்தப்பட்ட பிறகுதான் அழகர்கோவில் காய்ச்சலென்ற பிரசித்தியான காய்ச்சல் அநேகமாய் விலகிவிட்டதாகச் சொல்லுகிறார்கள். இவ்வாறு ஏற்பாடு செய்த புத்திமானுக்கு இவ்வளவுதான் புண்ணியமென்று அளவிடல் கூடாது. தீர்த்தம் ருசியாகவும் சுத்தமாகவு மிருக்கிறது. கோவிலுக்கு முன்பாக ஒரு பெரிய மண்டபமிருக்கின்றது. அதன் தூண்களில் நன்கு வேலைசெய்யப்பட்ட சில சிலா உருவங்கள் காணப்படுகின்றன. சிற்சில பின்னபட்டுப்போயிருக்கின்றன. அம்மண்டபத்தில் ஜனங்கள் தங்கி இளைப்பாறுவது வழக்கம். அம்முன்மண்டபத்துக்குத் தென்மேற்கில் ஒரு சிறு நாலுகால்மண்டபம் இருக்கிறது. அது அபாயஸ்திதியிலிருப்பதாகக் காணப்படுகிறது. மேற்கல் உடைந்திருக்கிறது. இதனை தேவஸ்தானம் மானேஜர் கவனித்து அவ்வபாயத்தைக் கூடியசீக்கிரம் நீக்காவிடில் ஜனச்சேதமுண்டாகலாம். முன்மண்டபத்துக்கு மேற்குச்சென்றால் கோவிலின் உள் திருமதிலும் அதன் கீழ்புறவாசல் பெருங்கதவுகளும் காணப்படுகின்றன.

உள்ளே சென்றால் விசாலமான பிரகாரங்களும் உன்னதமான மண்டபங்களும் அறைகளும் சிறு கோவில்களும் காணப்படுகின்றன. பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் இராமவிலாசம் என்று சொல்லப்பட்ட ஓர் அழகிய மண்டபம் காணப்படுகின்றது. அதில் உள்ள ஒரு மர விமானம் தந்தக்கால்களால் தாங்கப்பட்டு மிகவும் பழமையாகத் தோன்றுகின்றது. திருமலைநாயக்கர் காலத்தில் அவ்விமானம் செய்யப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். பெருமாள் கோவிலுக்குள் சென்றால் எங்கும் எல்லாம் ரம்மியமாய்க் காணப்படுகின்றன. பெருமாள் நின்ற திருமேனியாகவே இருக்கிறார். சகலமும் சுவர்ணமயமாய்த் தோற்றுகின்றன. கர்ப்பக்கிரகத்தின்மேலிருக்கப்பட்ட சுவர்ணவிமானமும் கலசங்களும் வெகுதூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கே கண்களைப்பறிக்கும்படியாய்ச் சொலித்துக்கொண்டிருக்கின்றன. உள்ளே மற்றோர் பிரகாரமுமிருக்கின்றது.

வெளிப்பிரகாரத்தின் சிற்சில சுவர்களிலும் உட்பிரகாரத்தின் வடபுறச்சுவரிலும் சிலா சாஸனங்கள் வரையப்பட்டிருக்கின்றன. அவை பழமையாகவும் காணப்படுகின்றன. சுவர்களில் நெய்ப்பசையதிகமிருந்தபடியாலும் அதிக இருட்டாயிருந்தபடியாலும் எழுத்துக்களைத்தெளிவாக வாசிக்கமுடியவில்லை. கிரந்தமும் தமிழும் சிற்சில இடங்களில் கலந்திருக்கின்றன. சீயக்காய், சுண்ணும்பு ஜலம் முதலியவற்றால் சுத்தஞ்செய்த பிறகு அவ்வெழுத்துக்களைப்பார்த்தால் மிகவும் பிரயோஜனப்படலாகுமென்று தோற்றுகின்றது. வெளிப்பிரகாரங்களில் உள்ள சாசனங்கள் சுண்ணும்பால் மூடப்பட்டு உருத்தெரியாமலிருக்கின்றன. மதிலுக்கு வெளிப்புறத்தில் வடபுறச்சுவரில் எராளமான சாஸனங்கள் காணப்படுகின்றன. அவை வெயிலிலும் மழையிலும் அடிபட்டுச் சிற்சில இடங்களில் அழிந்துபோயிருக்கின்றன. கற்களும் முறை பிறழ்ந்துகிடக்கும் போல் தோன்றுகிறது. முன்சொன்ன பதினெட்டாம்படிக்கோபுரத்துக்குப்பின்புறத்து வாசலின் இருபுறங்களிலும் இரு அழகான சாஸனங்கள் காணப்படுகின்றன. அவைகள் சமீபகாலத்தில் (சுமார் 250 வருஷங்களுக்குமேற்பட்டிருக்கலாமெனத் தெரியவருகிறது) எழுதப்பட்ட சாஸனங்கள். நாச்சியார் கோவிலும் அழகாக இருக்கின்றது.

கோவிலில் பூஜையும் கட்டளைகளும் ஒழுங்காக நடத்தப்பட்டு வருகின்றன. பற்பலவித்மான நிவேதனங்களும் காலந்தப்பாமல் சமர்ப்பிக்கப்பட்டுவருகின்றன. 'அழகர்' என்ற பெயர் அப்பெருமாளுக்குத்தகும். தேசாந்திரிகளுக்கு ஆகாரங்கள் தர்மத்துக்குக்கொடுபட்டுவருகின்றன. காலையில் ரொட்டியும் லட்டும் மைசூர் மகாராஜா கட்டளையில் நிவேதனம் ஆகி தேசாந்திரிகளுக்கே கொடுபட்டுவருகின்றன. அவை நிரம்ப அழகாகவும் உருசிகரமாகவுமிருந்துவருகின்றன. கோவிலுக்கு வடபுறம் மலைமேற் செல்ல ஒரு பாதை போகின்றது. அது முதல் காட்டிலாகாவைச்சேர்ந்ததாக வாசற்படி எறியவுடன் ஒரு பலகையால் தெரிந்துகொள்ளலாம். சிறிது வடக்குச்சென்றால் ஓர் அழகிய தடாகம் காணப்படுகின்றது. அதன் நீர் பெரியோர் மனம்போல் தெளிந்தும் குளிர்ந்து மிராநின்றது. அதில் ஸ்நானம்செய்து வஸ்திரம் முதலியவை சுத்தப்படுத்துகிறார்கள். அதன் அழகிய படிக்கட்டுக்கள் சீர்குலைந்து போயிருக்கின்றன. அவற்றைப்பழுதுபார்க்கும் பக்ஷத்தில் உசிதமாகவே இருக்கும். அங்கிருந்து வடக்கே ஒரு சிறுபாதை செல்லுகின்றது அதன் வழியே நேராகச்சென்றால் சுமார் 2 மைலுக்கு அப்பாலிருக்கப்பட்ட புண்ணிய தீர்த்தமாகிய நூபுரகங்கைக்குப்போகலாம். போகும் பாதை இருமருங்கும் மரங்களடர்ந்து நல்ல நிழலுள்ளதாயிருக்கின்றது. ஒரு பக்கம் உன்னதமலைக்காடுகளாகவும் மற்றொரு பக்கம் கிடுகிடுபாதாளமாகவுமிருக்கும் பள்ளத்தாக்கிலும் அதன் அடுத்த மலைக்காடுகளிலும் கன்னங்கரேலென்று தோன்றுகின்ற காட்டெருமைகள் கூட்டமாயும் சுவேச்சையாயும் மேய்ந்துகொண்டிருக்கின்றன.

அவைகளின் கொம்புகளும் கால்களும் வெளுத்துத்தோன்றுகின்றன. தூரத்துப் பார்வைக்கு அவைகள் யானைக்கூட்டம் போலவே தோன்றுகின்றன. 'கடா வெருண்டால் காடுபோதாது" என்று சொல்லப்பட்ட பழமொழி உண்மையாகவே யிருக்கிறது. நாங்கள் காலையில் $7\frac{1}{2}$ மணிக்கு அப்பாதையிற் செல்லும்போது இரண்டு எருமைக்கூட்டங்களைக் கண்டோம். ஒன்றில் எழெட்டுப்பத்தும் மற்றொன்றில் இருபதுக்கு மேற்பட்டும் பெரிதும்சிறிதுமாக எருமைகள் மேய்ந்து கொண்டிருந்தன. நாங்கள் ஒரு பெருங்கூச்சலிட்டவுடனே அவைகள் நடுநடுங்கி வெருண்டு எங்களைப் பார்த்துப்பின் மலையேறித்

துரிதமாகச் சென்று ஒருமரத்தடியிற்றங்கின. நெடுநேரம் நாங்கள் போகும்பாதையிலேயே அவை கண்ணுயிருந்தன. வேட்டையாளிகள் என்று ஒருவேளை அவை எங்களை நினைத்து அவ்வாறு பார்த்திருக்கலாம். பிறகு நாங்கள் அவைகளைத் தொந்தரவு செய்யமனமில்லாமல் கூச்சல் போடும் குழந்தைகளையும் அடக்கி யெங்கள் வழியே யேகினேம். அரைமணி நேரத்துக்குள் அக்கரடு முரடான ரஸ்தாவைக்கடந்து நாபுரகங்கை போய்ச்சேர்ந்தோம். அங்கே போனவுடன் இளைப்பு முற்றிலும் நீங்கிவிட்டது. நாபுரகங்கையென்பது மலையின் வெகு உன்னதஸ்தானத்திலிருந்து உற்பத்தியாகிவரும்படியான புண்ணிய தீர்த்தம். அது ஓரிடத்தில் அருவிரூபமாக விழுகின்றது. அவ்வருவியின் உயரம் சுமார் ஒருகஜமிருக்கலாம். அவ்விதமே விட்டுவிட்டால் ஜனங்கள் கெடுத்துவிடக்கூடுமென்றும் ஜலத்தை அசுத்தப்படுத்தக் கூடுமென்றும் நினைத்து அதைச்சுற்றி இருப்புக்கதவுகளிட்டு வெகு பந்தோபஸ்தாகப் பூட்டிவைத்திருக்கிறார்கள்.

இது தேவஸ்தானத்தார் செய்திருக்கப்பட்ட அழகான ஏற்பாடுகளில் ஒன்று. வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு ஜலம் விழுகிறது தெரியும். அப்படி விழப்பட்ட ஜலம் தென்புறமாக வந்து ஒருகோமுகி மூலமாக அருவி போன்றே விழுகின்றது. அவ்வருவி விழப்பட்ட இடம் ஒரு சிறுதடாகம்போல் கட்டப்பட்டிருக்கின்றது. விழப்பட்ட தீர்த்தம் வெளியே போகிறதற்கு வழியும் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் அச்சிறு தடாகம் பெரிய தொட்டியென்றே சொல்லலாம் ஒருகாலும் நிறைகிறதேயில்லை. அந்நாபுர கங்கையின் மேல்புறம் வடபுறம், தென்புறம் ஆக மூன்றுபக்கங்களிலும் அழகான மண்டபங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கிழக்கே மலைதான். மேல்புறத்து மண்டபத்திலிருந்து மேற்கு நோக்கினுல் மரங்களடர்ந்த அழகிய பள்ளத்தாக்கு காணப்படுகின்றது. அதில் பலபுதர்களும் அவைகளுக்கு மத்தியில் சிறுபாதைகளும் தோன்றுகின்றன. அப்பள்ளத்தாக்குக்கு இறங்கிச் செல்லும்படியான பாதையும் ஒன்று இருக்கின்றது. மண்டபத்தின் மேல் ஏறிப்பார்க்க வேண்டுமாஞலும் பார்க்கலாம். அதன்மேலேறிப்பார்த்தால் மலை வளம் செவ்வையாக விளங்குகின்றது. களைத்து வந்த பிரயாணிகளுக்கு இளைப்பாறும் விதம் ஓங்கி உயர்ந்து வளர்ந்த மரங்கள் குளிர் நிழலைத்தந்து உபசரிக்

கின்றன. அவைகளின் அழகிய கிளைகளிலும் மண்டபத்தின் மேற்புறத்திலும் குரங்குக் கூட்டங்கள் குதுகலித்து விளையாடிக் களிப்பிக்கின்றன. முக்கியமாய்க்குழந்தைகள் இவ்விளையாட்டால் மிக்க சந்தோஷத்தை அடைகிறார்கள். இந்நேத்திரானந்தத்துடன் சுரோத்திரானந்தமும் அங்கு உண்டு. பலவிதப் பக்ஷிகள் தீங்குரலாய்க் கூவிக் களிப்பிக்கும். இவை இரண்டினுக்கு மேலான ஆனந்தத்தை அந்நூபுர கங்கையின் ஸ்நானம் அளிக்கின்றது. தீர்த்தமும் கரும்பினுமினிப்பாக இருக்கின்றது. அது பெரியோர் மனம்போல் தெளிந்தும் குளிர்ந்துமிருக்கின்றது. ஸ்நானம் செய்தபின்னர் தேகத்தில் உண்டாகும் புளகாங்கிதத்தை அவரவர் அனுபவித்துத் தீரவேண்டுமே ஒழிய அது இன்னவிதமென்று எழுதிமுடியாது.

அந்நூபுரகங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு அம்மண்டபத்தில் சிறிது நேரம் உட்கார்ந்தால் சர்வேசுவரனுடைய அற்புத மகிமைகள் நிரீசுவரவாதிக்கும் உதயமாகு மென்றால் அதன் பெருமையைப் பின்னும் கூறுவானேன். "இனிது இனிது ஏகாந்தமினிது" என்ற மூதாட்டியின் மொழிகளது உண்மை அப்படிப்பட்ட பரிசுத்த இடத்துக்குப் போனால்மட்டுமே நன்கு புலப்படும். மதுரை ஜில்லாவிலுள்ள பல விஷ்ணு க்ஷேத்திரங்களில் திருமாலிருஞ் சோலை மிகவும் ரம்மியமானது. இவ்வழகர் கோவிலில் செய்து நிவேதனம் பண்ணும் தோசை ஒன்று ஒரு ரூபாவுக்கு மேல் விலையுள்ளது. அதுவெடு நாளைக்கும் கெடாது என்பது உலகப் பிரசித்தமானது. இம்மலையிலுண்டாகும் மாவடு மிக்க வாசனையுள்ளதாயும் கண்டோர் கண்களையும் மனத்தையும் கவரும்படியான பசுமை நிறமுள்ளதாயும் சரியானபடி பக்குவஞ்செய்யப்பட்டால் மூன்று வருஷகாலங்களுக்குக் கூட இருக்கும்படியான யோக்கியதை யுடையதாயும் இருப்பதால் இதனை விரும்பாதவர்கள் கிடையா? இவ்வடு பல வெளி ஜில்லாக்களுக்கும் போகின்றது என்பது பிரசித்தம். சிறுமலை வாழைப்பழத்துக்கு எத்துணை பிரசித்தி உண்டோ அத்துணை பிரசித்தம் இவ்வழகர்கோவில் வடுவுக்குமுண்டு. இத்துணை சிறப்பு வாய்ந்த க்ஷேத்திரத்துக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஒரு ஸ்தலபுராணம் உண்டு. அது இன்னும் வெளிவரவில்லை. தமிழில் அப்புராணத்துக்குக்கத்திய ரூப

மாகவாவது பத்திய ரூபமாகவாவது மொழிபெயர்ப்பு அச்சாகவில்லை. எமது நண்பரில் ஒருவர் அப்புராணத்தை வசனரூபமாகமொழிபெயர்த்துள்ளார்கள். தேவஸ்தானத்தார் இத்திவ்விய க்ஷேத்திரத்தின் புராணத்தை ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் அச்சியற்ற எற்பாடு செய்யவேண்டுவது அவர்களின் கடமை. இத்திவ்விய க்ஷேத்திர சம்பந்தமாய் ஆழ்வாராதிகளின் பாசுரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அழகர் அந்தாதி, அழகர் கலம்பகம் என்ற இரு சிறு அழகிய பிரபந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இவற்றை யெல்லாம் ஒருங்கு திரட்டி இது சம்பந்தமான சாஸனங்களையும் எடுத்தெழுதி எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து அச்சிடுவார்களானால் தேவஸ்தானத்தாருக்குப் பேரும் புகழும் உண்டாகும். இத்திவ்விய க்ஷேத்திரத்தின் ஏராளமான வருவாயை உத்தேசித்தால் இதனைப்போல் கோவில் சம்பந்தமாய் எத்துணையோ அரிய வேலைகளைச்செய்து சாசுவதமான புகழைக் கமிட்டி மெம்பர்களும் மானேஜரும் நிலைநிறுத்தலாம். இதனை அன்னோர்கள் நன்கு கவனிப்பார்களாக.

வைக்குமிடத் தன்புவையா மாந்தர் காளம்
மறலிகதை யறியீரோ வருமே நாளை
தக்ககதை புகுமேநங் குணமும் போமே
சரமும்போ மேயெடுத்த தநுவும் போமே
திக்கிலேவே றிக்கணமே சோலை வெற்பிற்
சீதரசஞ் சீவிதனைத் தேடிக் கொள்ளும்
துக்கமறு நமனோடத் துரப்பீர் யார்க்குந்
தோற்றிடி ரொருகாலுந் தோற்றி டீரே.

[இன்னும் வரும்]

பத்திராதிபர்.

ஜகத்ஜோதி.

(முன் தொடர்ச்சி.)

ஷாஜிஹானைத் தொடர்ந்துசென்ற மொகபத்கான் அவனைச்சூழ்ந்துகொண்டு மனத்தளர்ச்சியுற்ற அவன் சேனைகளை முறியடித்து அவனையும் பிடித்துச் சிறைப்படுத்த எத்தனிக்கையில் அவன் தப்பி ஓடிப்போய் மலைப்பிரதேசங்களில் சஞ்சாரம்செய்ய ஆரம்பித்தான். சொற்பகாலம் அங்குமிங்கும் திரிந்துகொண்டிருந்து கடைசியாய் வங்காளத்துக்குச் சென்றான். இதைக்கேட்கவே ஜகத்ஜோதிக்கு ஆற்றொணாத்துயரம் பிறந்தது. ஷாஜிஹான் உயிரோடு உள்ளவரை தன் ஆளுகைக்குச் சமாதானம் இராது என்பது அவள் எண்ணம். இது நிற்க தன்மருமகன் ஷாரியாருக்குப் பட்டங்கட்டவேண்டுமென்பது அவளுடைய முக்கியநோக்கம். ஆகையால் அவள் ஜிஹாங்கீருக்கு ஷாஜிஹான்மீது கோபம் அதிகரிக்கும்வண்ணம் செய்துவந்தாள். ஷாஜிஹானுக்கோ இது நன்றாகத்தெரியும். ஆகையால் தான் பலமுறை தகப்பனிடம் மன்னிப்புக்கேட்டு அவன் கோபத்துக்கு உள்ளாகாமல் அடங்கியிருக்கவேண்டுமென்று நினைத்தும் அவன் மனம் துணியவில்லை. சக்கரவர்த்தினியின் உட்கருத்தை நன்கு அறிந்தவனானாலும் தன் சாமர்த்தியத்தில் நம்பிக்கையுள்ளவனானாலும் அவன் தன்னைத் தகப்பனுக்கு ஒப்புக்கொடுக்கத் துணியவில்லை. ஒருகால் ஆயுள்பரியந்தம் தன்னைச்சிறையில் இடவும் நேரிடும் என்பதே அதற்குக் காரணம்.

இப்பொழுது அவனுக்குச் சிறிது நல்காலம் உண்டாயிற்று. வங்காளத்தில் போனவுடன் ஒரு சேனையைத்திரட்டினான். அங்கேயே ஒரு பலமான கோட்டையைத் தாக்கினான். சத்துரு அதைப்பலமாகக்காத்தும் கடைசியாகப் பிடித்துக்கொண்டான். அவ்வெற்றியால் ஊக்கங்கொண்டு பின்னும் சில முயற்சிகள் செய்தான். அவைகளெல்லாம் கைகூடிவந்தன. அந்தமாகாணம் முழுவதும் ஜயித்தான். பின் குபேரபட்டணமாய் விளங்கின டாக்கா நகருக்குட் சென்றான் அதனையும் தன் கைவசப்படுத்தி அதன் உள்ளே நுழையவே அங்கு ஏராளமான பணமும் ஆபரணமும் யுத்தசாமான்களும் கிடைத்தன.

உடனே அவ்வூர் அரசனைச் சிங்காசனத்தினின்றும் நீக்கித்தானே ஒரு புது அரசனை நியமனஞ்செய்து தனக்குக்கீழ்ப்பட்டு ஆளும்படி செய்தான். வங்காளம் முழுவதும் இவ்விதம் அவன் வசப்படவே அடுத்த நாடாகிய பேஹார்மேல் கண்வைத்தான். இவன் அந்நாட்டில் அடியெடுத்துவைக்கவே அவ்வூர் அரசன் ஓரே ஓட்டம்பிடித்தான். ஆனால் சிற்றரசர்கள் அவனிடம் சென்று அவனுக்கு உள்ளடங்கி வாழ்வதாக வாக்குறுதிகொடுத்தார்கள். அவர்களை அவன் அங்கீகாரம்பண்ணினதுமன்றி அவர்கள் கொணர்ந்த வெகுமதிகளையும் பெற்றுக்கொண்டு அவர்களுக்குச் செலவு கொடுத்தனுப்பினான். இம்மட்டோ? அவன் எதிர்பாராத ஒருசம்பவம் நேர்ந்தது. கூடுகிறகாலத்துக்கு எல்லாம் ஒருங்குசேருமன்றோ? ரோடாஸ் என்ற பலமானகோட்டையின் தலைவனான முபாரக் என்பவன் அவனிடம் வந்து அவனுக்குக்கீழ்ப்படிந்து தன்கோட்டையின் திறவுகோல்களை அவன் வசம் ஒப்புக்கொடுத்தான். அவன்து கோட்டையைப்பிடித்தல் எளிதன்று. அதனை ஒரு சத்துருவும் வென்றதில்லை. அப்படிப்பட்ட கோட்டையே தன் இருப்பிடத்துக்கு யோக்கியமென்று கருதித் தன்மனைவி மக்களை அவ்விடத்திற் கொண்டுவந்து வைத்தான். சாவதானமான ஓர் இடம் தக்கபடி வாய்க்கவே அவனுக்கு மேன்மேலும் தைரியமுண்டாயிற்று. வெற்றிமேல் வெற்றிகொள்ளவே அவனுக்கு எதுவும் இலக்ஷியமில்லையென்றே தோற்றிற்று. இருமுறை தான் தன் தகப்பனால் முறியடிக்கப்பட்டும் அவனைத்தாக்க அவன் மனம் துணிந்தது. மறுபடியும் மொஹபட்கான் யுத்தகளத்துக்குவர நேர்ந்தது அவன் பெருஞ்சேனையுடன் கங்கைக்கரையிலுள்ள காசிவரை வந்தான். அங்கு ஷாஜிஹான் தன்சேனையைத் தயாராய் வைத்துக்கொண்டிருந்தான். அவனிடமிருந்த குதிரைச்சேனை ஏறக்குறைய அரை லக்ஷமிருக்கலாம். அதை அவன் ஒரு சிற்றாற்றின் கரையோரமாக அணிவகுத்து நிறுத்திருந்தான். இருதிறத்தாருடைய சேனைகளும் கைகலந்தன. மொஹபட்கான் ஷாஜிஹானை முறியடித்துத் துரத்தினதுமன்றி அவன் சேனைகளின் பெரும்பாகத்தையும் அழித்துவிட்டான். தன் பெருஞ்சேனை யழிந்ததைக்கண்டு மனம்பொறாமல் ஷாஜிஹான் தன் குதிரை வீரர்களில் ஐந்நூறு பேருடன் தனக்கு என்ன அபாயம் நேரிடுகிறதாயிருந்தாலும் நேரிடட்டும் என்று துணி

ந்து யுத்தத்துக்கு மத்தியில் சென்றான். அவன் சேனைத்தலைவரில் ஒருவன் அவன் குதிரையைப்பிடித்து நடத்திக்கொண்டுபோய் அவனை வெளியேற்றாமலிருந்தால் அவன் மாண்டேயிருப்பான். உடனே அத்தளகர்த்தன் ஷாஜிஹானை யுத்தகளத்தினின்றும் விலக்கி ஒரு சாவதானமான இடத்தில் அவனைக்கொண்டுபோய் வைத்தான். அங்கிருந்து ஷாஜிஹான் ரோடாஸ்கோட்டைக்கு ஓடிஒளிந்துகொண்டான். டாக்காவினின்றும் அவன் கொள்ளை யடித்துக்கொண்டு வந்திருந்த தனத்தைச் சத்துருக்கள் கொள்ளையடித்துக்கொண்டிருந்ததால் உடனே அவனைத் துரத்திச்செல்ல அவர்களுக்குச் சாவகாசமில்லை.

தன்குடும்பத்தாரைத் தன் பலமானகோட்டையில் பத்திரப்படுத்திவிட்டுத் தான் எஞ்சியிருந்த சேனையைத்திரட்டிக்கொண்டு முக்கிய் கோட்டையான பாட்னவைச் சத்துருக்கள் தாக்காத வண்ணம் காப்பாற்றச்சென்றான். சத்துரு சமீபிக்கவே அதைவிட்டு ஓடுவதே யுக்தமென்று நினைந்து. வங்காளத்திலிருந்து மறுபடியும் தக்ஷிணத்துக்குச்சென்றான். தான் வங்காளத்தில் ஜயித்த நாடுகளும் கோட்டை கொத்தளங்களும் மொஹபட்கான் வசமாயின. அவன் வங்காளத்தில் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச்செய்து முடித்துச் சீர்ப்படுத்தி விட்டு ஷாஜிஹானைத்துரததிக்கொண்டு தக்ஷிணத்துக்குச் சென்றான். இத்துணை தளர்ச்சியுற்ற காலத்தும் ஷாஜிஹான் சிறிதும் மனதளர்ச்சிகொள்ளவில்லை. அவன் ஆம்பர் அரசனோடு நட்புக்கொண்டான். அவ்வரசனுக்கும் ஜிஹாங்கீருக்கும் சிலகாரணங்களால் மனஸ்தாபம் உண்டாயிருந்தது. அதனல் இரண்டு சத்துருக்களும் ஒன்று கூடினார்கள். இருதிறத்தாருடைய சேனையும் பர்ஹாம்பூர் கோட்டையைத்தாக்கி அபஜெயப்பட்டன. வெற்றிமேல் வெற்றிகொண்ட அவனுக்குத்தோல்விமேல்தோல்வி உண்டாகிக்கொண்டேவந்தது. அற்றகுளத்தின் அறு நீர்ப்பறவைபோல் அவன் தளகர்த்தர்களும் பிரபுக்களும் அவனைக் கைநழுவவிட்டார்கள். அவர்களைப்பார்த்து அவனது சேனைகளும் சிறிது சிறிதாக நழுவத்தொடங்கின. அவன் என்செய்வான். ஆயிரம் குதிரை வீரர்கள் மட்டும் அவனை விடாது பின் தொடர்ந்தார்கள். அவனுக்கிருந்த தைரியமெல்லாம் அடியோடே அற்றுப்போயிற்று. பிதாவுக்குத் தான் செய்த துரோகம் எப்பொழுதும் அவன் கண்முன் நின்றது. எரிகிற நெருப்பில் நெய்வார்த்தது

போல அவன் மனைவியாதியோடு தேகவியாதியும் சேர்ந்தது. வன விலங்கு துரத்தப்பட்டதுபோல் இடத்துக்கிடம் அவன் துரத்தப்பட்டான். சகலரும் அவனுக்குச் சத்துரு ஆனார்கள். அவனும் எல்லோருக்கும் சத்துரு ஆனான். தன்னால் தாங்கக்கூடிய மட்டும் இக்கஷ்டங்களையெல்லாம் சகித்துக்கொண்டே சென்று தன்னால் வெற்றிகொள்ளக்கூடாத இடத்தில் விட்டு ஓடிப்போனான்.

அலைந்து அலைந்து அவன் அலுத்துப்போனான். இந்நிலையில் அவன் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கித்தத்தளித்தது. கடைசியாகத் தன் குறைகளைக்கூறி முறையிட்டுத் தன் தகப்பனுக்கு ஒரு நிருபம் எழுதினான். அதில் தன் கஷ்ட நிலைமையைக் கல்நெஞ்சும் உருகும்படி வர்ணித்தெழுதினான். ஜிஹாங்கீரோ ஷாஜிஹானிடத்தில் மிக்க நேசமுள்ளவன். அவன் கோழைத்தனமுள்ளவன். தனக்கு ஒரு காலத்தில் அந்தியந்தப்பிரியமாயிருந்த மகன் எழுதிய கடிதத்தைக் கண்ணுற்றவுடனே அரசன் மனம் தத்தளித்தது. அக்கடிதம் படிக்குங்கால் அவன் கண்கள் நீர்சொரிந்தன. எத்துணையோ கொடுஞ்செய்கைகளை மகன் செய்திருந்தும் அச்சமயத்தில் அவன் அவைகளை முற்றிலும் மறந்துவிட்டான். "பெற்றமனம் பித்து" அன்றோ. இருந்தாலும் ஜிஹாங்கீர் தன் இரக்கத்தை முற்றிலும் வெளிக்காட்டவில்லை. வங்காளக் கோட்டைகளைத் தன்னிடம் முற்றிலும் ஒப்புவிக்கவேண்டுமென்றும் அவன் மூன்று குமாரர்களையும் தன்னிடம் அனுப்பவேண்டுமென்றும் அப்பொழுது தான் அவனை மன்னிப்பதாகவும் மறுமொழி எழுதினான். ஷாஜிஹான் அவ்வாறு உடனே செய்தான். ஆனால் தான்மட்டும் தகப்பனிடம் போகத்துணியவில்லை. தந்தையின் முகத்தில் விழிக்கத் தனக்கு வெட்கமாக இருக்கிறதென்று வினயமாய்த் தெரியப்படுத்திக்கொண்டான். வாஸ்தவத்தில் அவனுக்கு ஜகத்ஜோதியினிடத்தில் நம்பிக்கையில்லை.

போய் அகப்பட்டுக்கொண்டால் எப்படியாவது தன்னைச்சங்கடத்திற்கு உட்படுத்துவானென்பது அவன் எண்ணம். ஆகையால் அவன் தேசசஞ்சாரம் பண்ணுவதாகப்பாசாங்கு பண்ணிக்கொண்டு தலைமறைவாய் இன்றைக்கோரூர் நாளைக்கோரூர் என்று ஒரு நாளிருந்த இடம் மறுநாள் இல்லாமல் சுற்றிக்கொண்டேயிருந்தான். இவ்

வாறு இவன் செய்வதற்கு ஜகத்ஜோதியே காரணம். அவளுடைய இராஜ தந்திரத்தையும் சாமர்த்தியத்தையும் கண்டு நடுநடுங்கினான். அவளுக்கு ஜிஹாங்கீரிடமிருந்த செல்வாக்கை அவன் நன்கறிந்தவன் ஆகையால் நேரில் போகும் பக்ஷத்தில் தனக்கு அபாயமே நேரிடும் என்பது அவனுக்கு நிச்சயம். சரித்திரத்தில் பல ஸ்திரீகளைப்பற்றி நாம் படித்திருக்கிறோம். இத்துணை சாமர்த்தியத்தோடு சக்கிரவர்த்தியைத் தன்வசப்படுத்திக்கொண்டு இராஜ்யம் முழுவதும் கிடுகிடுவென்று நடுங்கும் வண்ணம் செய்தவர்கள் சிலரே எனத்தோற்றுகிறது. அவர்களுள்ளும் ஜகத்ஜோதியே முதன்மை பெற்றவள் என்று கூறினும் குறைவாகாது. இராஜ தந்திரத்தில் அவளுக்கு இருந்த நிபுணத்துவம் மிகவும் அதிசயிக்கத்தக்கது. ஜிஹாங்கீரின் கோலுக்கு இவள் ஒரு பூண்போலிருந்தாள்.

(இன்னும் வரும்)

எஸ். சாமிநாதையர்.

உ

பகவத்கீதை சங்கரபாஷ்யத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.

பகவத்கீதையானது உயர்ந்தமத கிரந்தம் எனபதும் அது எம்மதஸ்தருக்கும் ஒப்பானகிரந்தமென்பதும் அறியாதாரில்லை. உலகத்திலுள்ள புத்திமான்கள் பலரும் ஜாதிமத வித்தியாசமின்றி அவ்வுத்தம கிரந்தத்தை ஏற்றிப் போற்றுகின்றனர். தற்காலம் ஆங்கிலம் கற்ற நம்மவரும் அதைப் பொன்போற்ற ஆரம்பித்திருக்கின்றனர். முற்காலத்தில் அதை நிவிர்த்திமார்க்கத்திலுள்ள மகான்கள்மட்டும் அதைக் கையாடிவந்தனர். ஒவ்வொரு அக்கிரகாரத்திலும் இக்கீதையைக் காலையில் உஞ்சி விருத்திக்குவரப்பட்டவர்கள் சொல்லக்கேட்கலாம். வரவரக் கிராமங்களில் இதன் மகிமை குறைந்து பட்டணங்களில் பரவத் தொடங்கியிருக்கின்றன. ஞானமார்க்கத்தை இவ்வளவு சுருக்கமாகவும் அழகாகவும் புகட்டக்கூடிய புத்தகம் இவ்வுலகினில் கிடையாதென்றே துணிவாகக் கூறலாம். இதில் அடங்கியிருக்கும் சாஸ்திரக்கொள்கைகளோ அபாரம். இதை ஸ்ரீ கிருஷ்ணபகவான்

பரமபக்த சிகாமணியாகிய அர்சுனனுக்கு 18 அத்தியாயத்தில் அடக்கி உபதேசித்தருளினர். கீதை என்ற பெயர் இதற்கேதகும். சொல்லும்பொழுதே அமிருதமாயிருக்கும். "சொன்னாலும் வாய் மணக்கும், தொட்டாலும் கைமணக்கும்" என்றவண்ணம் இதைச் சொல்லுங்காலத்திலேயே ஒருவித ஆனந்தமுண்டாகும். இதனைத் திரிமதஸ்தர்களும் ஒப்புக்கொண்டு மிகப்பாராட்டிவருகின்றனர். இதற்கு ஸ்ரீமத்-சங்கரபகவத்பக்தாள் ஸ்ரீமத்-இராமநுஜாசாரியார் ஸ்ரீமத்-மத்துவாசாரியார் ஆகிய மூவரும் தெளிவும் விரிவுமான பாஷ்யம் இயற்றிருக்கின்றனர். இதுநிற்க, மதுசூதனசரஸ்வதி யென்ற ஒரு மகானுபாவரும் இதற்கு ஒரு சிறந்த வியாக்கியானம் எழுதியுள்ளார்கள்.

பலர் இவ்வியாக்யானத்தை மிகப்பாராட்டுகின்றனர். அத்வைதிகளால் பாராட்டப்படும் சங்கரபாஷ்யமே முற்பட்டது. அவ்வியாக்கியானம் மிக்க அழகிய நடையில் எவரும் சுலபத்தில் அறிந்துகொள்ளும் வண்ணம் எளிதாய் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருக்கிறதென்பது ஸம்ஸ்கிருதம் வாசித்த எவரும் ஒத்துக்கொள்வார்கள். அவ்வியாக்கியானத்தில் சொல்லப்பட்ட அரியவிஷயங்களைச் சம்ஸ்கிருதிகளே அறியக்கூடியவர்களாயிருக்கிறார்கள். தமிழில் வேதாந்தம் வாசிக்கும் அநேகருக்குச் சங்கரபாஷ்யம் உதவாமலே இருந்துவருவது மிகப் பரிதபிக்கத்தக்கதே. அரிய நுட்ப விஷயங்களை மூலப்பிரபந்தங்கள் மூலமாக அறிந்தால் மட்டுமே சந்தேக விபரீதங்களின்றி விஷயங்களை அறியாலாம். அவ்வித சௌகரியம் இதுவரை ஏற்படவில்லை. இப்பெருங்குறைவை நிவிர்த்தி செய்யும் பொருட்டு மேற்படி சங்கர பாஷ்யத்தைத் தமிழில் சரியான மொழிபெயர்ப்புச் செய்து சுலோகங்களுடன் ஸம்ஸ்கிருத பாஷ்ய மூலத்தையும் மொழிபெயர்ப்பையும் உயர்ந்ததும் இலேசுமான அமெரிக்கன் கடிதத்தில் மிகவும் அழகாய்ச் செய்தும் வெகு பணச்செலவில் பிழையின்றி அச்சிட்டு வருகிற மதுரை ஜில்லா மேல்மங்கலம் மகா-ள-ள-ஸ்ரீ சுந்தரராஜையர் அவர்களுக்குத் தமிழ் நாட்டார் மிகவும் கடமை பூண்டவராகிறார்கள். இது பன்னிரண்டு பகுதிகளாக வெளிவரும்; முன் பணம் கொடுப்போர் தபால்கூலி யுள்பட ரூ 6 மட்டும் கொடுக்கவேண்டும். ஏனையோர் ரூ 15 கொடுக்கவேண்டும். இச்சுலப

மான ஏற்பாடு சொற்ப நாட்களே ஊர்ஜிதத்திலிருக்குமாகையால் புத்தகம் வாங்கவிரும்புவோர் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள முயல்வார்களாக. எழுநூறு எண்ணூறு பக்கங்கள் ராயலே விடப் பெரிய உருவத்தில் 6 ரூபாவுக்குக்கிடைப்பதென்றால் சாத்தியமன்று மிஸ்டர் சுந்தராஜமையர் இப்பாஷ்யத்தைப் பெரும் அபிமானத்தால் வெளியிடுகிறபடியால் இச்சொற்ப விலே ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவர்களே பார்யாதர்மம் என்ற அரிய நூல் ஒன்று முன்னரே வெளிப்படுத்திக் கீர்த்தி பெற்றவர்களாகையால் இவர்களது ஸம்ஸ்கிருத ஞானத்தையும் மொழிபெயர்க்குந் திறமையையும் தமிழுலகம் பாராட்டுரைத்துப் பார்த்திருக்கின்றது. 56 பக்கங்கள் அடங்கிய இதன் முதல் பாகத்தை நம்பார்வைக்கு அனுப்பிய ஐயர் அவர்களுக்குமிக்க நன்றி பாராட்டுகின்றோம். அவர்களுக்கு ஊக்கம் உண்டாகும் வண்ணம் நம் கனதனவான்களும் வேதாந்தப் பிரியமுடையவர்களில் ஸம்ஸ்கிருதம் தெரியாதவர்களும் இவ்வரியமொழிபெயர்ப்பை வாங்கி வாசித்தல் அன்னோருக்கும் நாட்டுக்கும் பெரும்பயனைத்தரும் என்பதிற் றடையில்லை. தேசோபகாரத்தையே பெரும்பயனாகக் கருதி இவ்வரிய விஷயத்தில் முயற்சி செய்துவரும் ஷ சுந்தரராஜமையர் அவர்களுக்குக் கீதாசாரியாரான பகவானே சகல கிருபைகளையும் புரிவாராக. ஓம் சுபம்.

பத்திராதிபர்.

நாமக்கல் ரதோற்சவச்சிறப்பு.

இந்நகரில் எழுந்தருளியிருக்கும் கருணாமூர்த்தியாகிய ரங்கநாத சுவாமிக்கு முன்னமேயிருந்த ரதம் மிகவும் பழமைப்பட்டு திருவிழாக்காலத்தில் நடாத்த முடியாமல் நின்றிருந்தது. இதனை யுணர்ந்த ஷயூர் ஜமீந்தாரணி, ஸ்ரீமதி முத்தியாலம்மாள் அவர்கள் இக்குறையை நீக்கக்கருதி புதிதாக முன்னிலும் சிறப்ப ஒரு ரதம் செய்யத் தக்கவேலைக்காரர்களைக்கொண்டு தம தெண்ணத்தை முடித்துத் தரும்படி இராமேசுரம் திருப்பணி ஆனரெரி ஏஜண்டும், சிற்ப, சாஸ்திர ஆராய்ச்சியிற் சிறந்தவரும், கடவுட்கைங்கிரியங்களில் பெரிதும் வி

ருப்புற்றவருமாகிய ஸ்ரீமத் நா. பெ. நா. மு. முத்துராமையா அவர்களிடம் அறிவிக்க அவர்கள் சிற்பவேலையினும் தச்சுவேலையினும் கைதேர்ந்த இராமநாதபுரம் வீரபத்திர ஆசாரியையனுப்பி ரதத்தை நிர்மாணிப்பதற்கு வேண்டிய முக்கிய விதங்களையும் கூறி ஷை ஜமீந்தாரணி அம்மாள் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவித்தார்கள். ரதத்தின் வேலைத்திறமை மிக வியக்கற்பாலது. ஷை ஜமீந்தாரணி அம்மா அவர்களின் உத்தமகுணத்துக்குத்தக்கபடியே அமைந்தது. அதனை விசுவாவசு௵ பங்குனி௴ ௨௰௬ ௳ அலங்கரித்து நடாத்திய முத்தியாலம்மாள் அவர்கட்கும் அவர்கள் கருத்தின்படி எல்லாவற்றையும் சிறப்பித்த மகா-ா-ா-ஸ்ரீ துரைசாமி ரெட்டியாரவர்கட்கும் சிந்தித மனோரத சித்தியுண்டாக ஸ்ரீரங்கநாத சுவாமி திருவருளை வணங்கிப் பிரார்த்திக்கின்றனம்.

ஷை ரதம் வெள்ளோட்டத்தைப்பற்றியும் ரதோற்சவத்தைப் பற்றியும் மேற்கூறிய முத்துராமையா அவர்களியற்றிய கவிகள்.

1. நாமக்கல் வாழரங்க நாதற்கு ரதம் நன் றாகச்
மாமகத் துவமாச் செய்து வளர்விசு வாவசுப்பேர்ச்
சேமமார் ஆண்டு மீனந் திகழிரு பத்திரண்டென்
றேமதி தெய்தி தன்னி லியங்குவெள் ளோட்டமாகும்.

2. திருமக ளுடனே யந்தத் தேரினிற் சிறப்புற் றோங்கு
மிருபதோ டாருந் தெய்தி யெழுந்தரு ளரங்க நாதர்
தரிசனம் செய்து வேண்டுஞ் சகலசம் பத்துமெய்த
அருமையா யடிய ரெல்லாம் அன்புடன் வருக மாதோ.

---

1. சீர்பெறு மரங்கநாதர் தேரினிலு வந்தெழுந்து
பார்பெறு மாதிசேடன் பணுமுடி கம்பங்கொள்ள
நார்பெறு நாமக்கல்வி னுன்முக னடாத்தச்சென்று
நேர்பெறு நிலைக்குவந்த பெருமையை நிகழ்த்தற்பாற்றே.

2. நாமக்கல் லரங்கநாத சுவாமிக்கு ரதநன் றாகச்
சீமையாள் முத்தியாலம்மாள் செய்துவெள் ளோட்டஞ்செய்தாள்
பூமகள் பொலிக வானம்போற்ற மண்ணுள்ளோ ரேத்த
க்ஷேமங் கொளடியரென்று நிலைபெற வாழ்கமாதோ.

சுபம்.

நாமக்கல்வாசி.